(2) REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES (DINA THANTHI CASE).

SRI K. PARTHASARATHY : Mr. Speaker, Sir, I present to the House the Report of the Committee of Privileges on the ' Dina Thanthi Case '.

(3) REPORT OF THE COMMITTEE ON ESTIMATES.

SRI T. M. NALLASAMY : Mr. Speaker, Sir, I present to the House for Report of the Committee on Estimates on Jails and other allied Departments.

(4) REPORT OF THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

SRI RAMA ARANGANNAL : Mr. Speaker, Sir, on behalf of the Chairman of the Committee on Government Assurances, I present to the House the Second Report (Third Assembly) of the Committee on Government Assurances.

VI.—NON-OFFICIAL BUSINESS.

Bills.

(1) THE MADRAS BUILDINGS (LEASE AND RENT CONTROL) SECOND AMENDMENT BILL, 1962 (L.A. BILL NO. 19 OF 1962.)

SRIMATHI T. N. ANANDANAYAKI : Mr. Speaker, I move—

' That the Madras Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1962 (L.A. Bill No. 19 of 1962), be taken into consideration '.

கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவின் முக்கிய நோக்கம், குடியிருப்புக்காக அல்லாமல் தொழில்களுக்காக விடப்படுகிற வாடகைக் கட்டடங்களுக்கு வாடகை 400 ரூபாய்க்கு மேல் இருக்குமானால் அரசாங்கம் லீஸ் அண்டு ரெண்ட் கண்ட்ரோல் சட்டத்திலிருந்து விதி விலக்குத் தரவேண்டுமென்பதற்காகத்தான், 1960–க்கு முன்பு, அரசாங்கம் விருப்பப்பட்டால் குடியிருப்புக் கட்டடங்களுக்கு விதி விலக்கு கொடுக்கலாம் என்று இருந்தது. 1960–ம் ஆண்டில் இந்தச் சட்டத்தைப் புனராலோசனை செய்து திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது செக்ஷன் 30–ல் மூன்று விதமான கட்டடங்களுக்கு விதிவிலக்குத் தந்து, கட்டடச் சொந்தக்காரர்களுக்கு உற்சாகத்தைத் தரவேண்டுமென்ற காரணத்தாலே 1960–க்குப் பிறகு கட்டப்பட்ட கட்டடங்களில் குடியிருப்புக் கட்டடங்களுக்கு 250 ரூபாய் வாடகையும், தொழில் நிறுவனங்கள் இருக்கும் கட்டடங்களுக்கு 400 ரூபாய் வாடகையும் இருந்தால், அந்தக் கட்டடங்களுக்கு விதி விலக்கு தரப்பட்டது. இப்போது நடைமுறையில் பல தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. குடியிருப்புக் கட்டடங்களில் மொத்தமாக ஒருவரிடமிருந்து 250 ரூபாய் வாடகை வருவதாக இருந்தால் விதிவிலக்கு கொடுக்கலாம். சில வீடுகளில் 10, 20 ரூபாய் வாடகை கொடுக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் மொத்தத்தில் அந்த வீட்டிலிருந்து 250 ரூபாய் வரை வாடகை வரும். அந்த மாதிரி வீடுகளுக்கு விதிவிலக்குக் கொடுப்பதன் காரணமாக பல சிறு குடித்தனக்காரர்கள் காலி செய்யப்படும்படியான நிலைமை இருக்கிறது. ஆகவே, 250 ரூபாய் வாடகையும் ஒரே ஒரு குடித்தனக்காரர் கொடுத்தால்தான் அதற்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டும். அதை அரசாங்கம் அப்போதே எடுத்துக்கொள்ளாமல் பின்னாலே யோசித்துப் பார்த்து, தொல்லைகள் இருக்கிறதென்ற காரணத்தினாலே திருத்தி அமைத்திருக்கிறார்கள். அந்த முறையில் தொழில் நிறு